வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 10.10.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 283 | பக்கங்கள் : 08

### வடக்கு, கிழக்கு அபிவிருத்தி:

# சர்வதேச ஆய்வு மகாநாடு இன்று கனடாவில் ஆரம்பம்!

றொறன்ரோ, ஒக்ரோபர் 10


**மூன்று தசாப்த போரால் பாதிக்கப்பட்ட - அழிவடைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை கட்டியெழுப்பும் நோக்கில் சர்வதேச மாநாடு இன்று வெள்ளிக்கிழமை கனடாவின் ஸ்காபரோ நகரில் ஆரம்பமாகிறது.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வாய்ப்பு என்ற தலைப்பில் அனைத்துலக தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

றொறொன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத்தில் இன்றைய தினம் ஆரம்பமாகும் இந்த மாநாடு தொடர்ச்சியாக 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக 75இற்கும் மேற்பட்டவர்கள் ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதில், 53 ஆய்வுக் கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு வாசிக்கப்படவுள்ளன.

இந்த மாநாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 4 புலமையாளர்களும் பங்கேற்கவுள்ளனர். (ஐ)



# அணையா விளக்கு தூபி விஷமிகளால் உடைப்பு!

- பு. கஜிந்தன், த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஒக். 10

செம்மணியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்கு தூபி விஷமிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவு தூணுக்கு அண்மையாக இந்தத் தூபி அமைக்கப்பட்டிருந்தது. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்கின் யாழ்ப்பாண வருகையை ஒட்டி கடந்த ஜூன் மாத இறுதியில் செம்மணி

07

# முந்தைய அரசாங்கங்களின் தவறே ஜெனிவா தீர்மானத்துக்கு காரணம்!

## வெளிவிவகார அமைச்சர் விஜித

கொழும்பு, ஒக். 10

முன்னைய அரசாங்கங்கள் தேசிய பிரச்னையை முறையாக நிர்வகிக்காமையே ஜெனிவாவில் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளுக்கான அடிப்படை காரணம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், 2009 இல் போர் முடிவடைந்த பின்னர், மனித உரிமைகள் பேரவை மூலம் போர், மனித உரிமைகள் மீறல் குறித்து பல தீர்மானங்களை முன்னைய அரசாங்கங்கள் உரிய முறையில் கையாளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற 60ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வு - அதில், இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் விசேட உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களை

07

# 47 இந்திய மீனவர் கைது!

யாழ்ப்பாணம்,ஒக். 10

நெடுந்தீவு, தலைமன்னார் கடற்பரப்புகளில் எல்லைதாண்டி வந்து மீன்பிடித்த 47 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்களின் 5 படகுகளும் கைப்பற்றப்பட்டன என்று கடற்படை பேச்சாளர் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் இரவு, நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் ஒரு படகுடன் 17 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்பரப்பில் 4 படகுகளுடன் 30 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

தலைமன்னாரில் கைதான 30 மீனவர்களும் மன்னார் நீதிவானின் உத்தரவின்படி எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

### ஐ.எம்.எவ்வின் 5ஆம் கட்ட மீளாய்வு:

# பணியாளர் மட்டத்தில் இணக்கம் எட்டப்பட்டது

கொழும்பு, ஒக். 10

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயல் திட்டம் தொடர்பான ஐந்தாம் கட்ட மீளாய்வு குறித்த பணியாளர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக குழுவின் மதிப்பாய்வு அங்கீகரிக்கப்பட்டதும் 34 கோடியே 70 இலட்சம் டொலர் இலங்கைக்கு நிதியுதவி கிடைக்கவுள்ளது.

முன்னதாக இலங்கைக்கு 4 ஆண்டுகளுக்கு

07

# சகல மத தலைவர்களும் இணைந்தால் இனப் பிரச்னைக்கு தீர்வு காணலாம்!

## ஆறு. திருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 10

பௌத்தமத பீடத்தில் உள்ளவர்கள் நினைத்தால் ஒரு நாளிலேயே இனப் பிரச்னையை தீர்க்க முடியும் என்று தெரிவித்துள்ள ஆறு. திருமுருகன் நாட்டிலுள்ள அனைத்து மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து ஜனாதிபதியை சந்தித்து அழுத்தம் கொடுப்பதன் மூலமே நீண்டகாலமாக புரையோடிப்போயுள்ள இனப் பிரச்னையை தீர்க்க முடியும் - என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற சர்வமத மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் இருக்கிற மதங்களில் அதிகம் பாதிக்கப்பட்ட மதம் என்றால்

07

# மன்னார் காற்றாலை திட்டம் கலந்துரையாடல்கள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 10

மன்னாரில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள காற்றாலை மின்சார திட்டத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் உள்ளக ரீதியான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும், எதிர்காலத்தில் புதிய காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்களை ஆரம்பிக்காதிருப்பது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல்துறை சார்ந்தவர்களுடன் அரசாங்கம் கலந்துரையாடல்களை

07

# பெலவத்தையின் தனிநபர் அரசை நிர்வகிக்கவில்லை

## குற்றச்சாட்டுகளுக்கு ரில்வின் பதில்

கொழும்பு, ஒக். 10

பெலவத்தையிலிருந்து தனிநபர் ஒருவரால் அரசாங்கம் நிர்வகிக்கப்படுவதாக எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்த முற்படுகின்றன. பெலவத்தை பணிமனையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) முக்கிய கூட்டங்கள் மாத்திரமே இடம்பெறுகின்றன. எதிர்க்கட்சிகள் அதனை மிகைப்படுத்திக் கூறுகின்றன என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

07

# வெளிநாடுகளின் நிபந்தனைக்கு இலங்கை அடிபணியக்கூடாது!

## பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஒக். 10

சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) மற்றும் வெளிநாடுகளின் நிபந்தனைகளுக்கு இலங்கை அடிபணியக்கூடாது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டு நிபந்தனைகளை அடிமையாகப் பின்பற்றுவது நாட்டின் சுயமரியாதைக்கும் சுதந்திரத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

தென்னிலங்கையின் பிரபல ஊடகமான

07

# மாகாண சபைகள் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்துவோம்

## அமைச்சர் விஜித அறிவிப்பு

கொழும்பு, ஒக். 10

மாகாண சபைகள் தேர்தல்கள் அடுத்த ஆண்டு நடைபெறும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

"விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படுமா அல்லது கலப்பு முறையின் கீழ் நடத்தப்படுமா என்பதை நாங்கள் முடிவு செய்யலாம். இது குறித்து விவாதங்களை நடத்தலாம்", என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி ஆலயத்தினரிடம் ரி.ஐ.டியினர் நேற்று விசாரணை!

வவுனியா, ஒக். 10

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று விசாரணை நடத்தி உள்ளனர்.

நெடுங்கேணி - வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் செ. சசிகுமார், செயலாளர் து. தமிழ்ச்செல்வன் ஆகியோர் இரு தினங்களுக்கு முன்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று காலை வவுனியாவில் உள்ள பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவு பணிமனையில் வாக்குமூலம் அளித்தனர்.

இதன் பின்னர், அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டனர். அதில், "விசாரணையில் எமது ஆலயம் சார்ந்த விடயங்களையும், எமது தனிப்பட்ட தகவல்களையும் கேட்டிருந்தனர். நாம் அனைத்துக் கும்பதில் அளித்திருந்தோம்.

அந்தவகையில் மதம் சார்ந்த பணிகளை முன்னின்று மேற்கொள்பவர்களை அச்சுறுத்தி நசுக்கும் செயல்பாடாகவே இதனைப் பார்க்கவேண்டியுள்ளது. எமது ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் எங்களை மாத்திரம் தொடர்ச்சியாக விசாரணை செய்கின்றனர்", என்று கூறினர். (ஐ)



# பாராளுமன்றத்தில் நேற்று வாணி விழா கொண்டாட்டம்!

கொழும்பு, ஒக். 10

பாராளுமன்றத்தில் வாணி விழா நேற்று வியாழக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை பாராளுமன்றம் இணைந்து இந்த விழாவை நடத்தின.

அமைச்சர் இ. சந்திரசேகரின் விசேட ஏற்பாட்டில் சபாநாயகரின் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்வுகளை பாராளுமன்ற ஆராய்ச்சி அலுவலர் வி. முரளிதாஸ் ஒருங்கிணைத்திருந்தார்.

இந்து குருமார் அமைப்பின் தலைவரும் அச்சுவேலி சிவசிறீ குமாரசுவாமி குருக்கள் அறக்கட்டளையின் ஸ்தாபகருமான சிவாகம கலாநிதி சிவசிறீ கு. வை. க. வைத்தீஸ்வர குருக்கள் தலைமையில் பூசைகள் நடைபெற்றன.

(ஐ)

# 'கொடியில் கிடந்து உலரும் புன்னகை' தமிழ், ஆங்கில கவிதை நூல் வெளியீடு



யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் எழுதிய "கொடியில் கிடந்து உலரும் புன்னகை" தமிழ், ஆங்கில கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக மொழியியல், ஆங்கில துறையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த விழாவில் அறிமுக உரையை கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் நிகழ்த்தினார். தொடர்ந்து ஆய்வுரையை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். திருவரங்கன், விரிவுரையாளர் தனுக பண்டார ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த ஆய்வாளர் கீதா சுகுமாரனின் சிறப்புரை நடந்தது.

தொடர்ந்து நூலை பேராசிரியர் ரகுராம் வெளியிட கலைமுகம் சஞ்சிகையின் ஆசிரியர் கி. செல்மர் எமில் பெற்றுக் கொண்டார். பின்னர், சித்தாகாஸ் நடன நிறுவன இயக்குநர் இராசையா தனராஜின் போரில் உயிர்நீத்த ஆத்மாக்களின் அழுகுரலாக ஒலித்த காண்பியல் நடன நிகழ்வு சபையோரை பெரிதும் கவர்ந்திருந்தது. தொடர்ந்து குறித்த கவிதைப் புத்தகத்தில் இடம்பெற்ற சில கவிதைகளை கோபாலகிருஷ்ணண் சத்தியன் பாடல்களாக பாடினார்.

எழுத்தாளர்கள், பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் என அரங்கம் நிறைந்த நிகழ்வாக நூல் வெளியீடு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஊடக வலுப்படுத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 10

காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் கிராமமட்ட சங்கங்களுக்கான ஊடக வலுப்படுத்தல் செயல் திட்டம் மூளாயில் உள்ள காவேரி கலா மன்றத்தின் பணிமனையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்த நிகழ்வில் மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது பயமில்லாத - நேர்த்தியான உரையாடலை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. இதில், சமூக மட்ட அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

# பருத்தித்துறையில் இரத்ததான முகாம்

வடமராட்சி, ஒக். 10

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை அஞ்சல் அலுவலகத்தால் இரத்ததான முகாம் நேற்று நடத்தப்பட்டது.

பருத்தித்துறை அஞ்சல் பணிமனையின் மண்டபத்தில் நடந்த இந்த இரத்த தான முகாமுக்கு வடமராட்சி லயன்ஸ் கழகம் ஒத்துழைப்பை வழங்கியது.

இந்த இரத்ததான முகாமில் அஞ்சல் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் இரத்ததானம் செய்தனர்.

(ஐ-02-08)

# மாணவியருடன் அங்கசேஷ்டை; ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஒக். 10

மாணவிகளுடன் அங்கசேஷ்டையில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்த அத்துமீறல் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

குறித்த பாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவியரிடம் அங்கு கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் தொடர்ச்சியாக அங்கசேஷ்டையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் மாணவிகள் தமது பெற்றோர் மூலம் பாடசாலை நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தினர். ஆனால், பாடசாலை நிர்வாகம் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிமனையில் முறைப்பாடு செய்தனர். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-05)

# தரம் 1இற்கான அனுமதி 2026 ஜனவரி 20இல்

கொழும்பு, ஒக். 10

நாட்டின் சகல தமிழ், முஸ்லிம், சிங்கள பாடசாலைகளிலும் 2026 கல்வி ஆண்டுக்கான முதலாம் வகுப்பு ஜனவரி 20 ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், புதிய தரம் 1 மாணவர்களை வரவேற்கும் உத்தியோகபூர்வ விழாவில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட வேண்டும். இதற்கமைய தரம் 2 மாணவர்களால் வரவேற்பு, பெற்றோர்கள், அழைக்கப்பட்ட விருந்தினர்களின் பங்கேற்பு, தேசிய மற்றும் பாடசாலைக் கொடிகளை ஏற்றி, அதனைத் தொடர்ந்து தேசிய மற்றும் பாடசாலை கீதங்களை இசைத்தல், ஆரம்பக் கல்விச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் புதிய தரம் 1 பாடத்திட்டம் குறித்து பெற்றோருக்கு ஓர் அறிமுக அமர்வு என்பன அன்றைய தினம் நடைபெற வேண்டும்.

புதிய மாணவர் களை வரவேற்க ஆரம்பப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்படும் எளிமையான மற்றும் மகிழ்ச்சியான நிகழ்ச்சியாக அது அமைய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# மாநகர சபை வளாகத்துக்குள் உறுப்பினர்மீது தாக்குதல்!

வவுனியா, ஒக். 10

வவுனியா மாநகர சபை உறுப்பினர் ஒருவர் மீது மாநகர சபை வளாகத்துக்குள் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் மாநகர முதல்வர் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநகர சபை அமர்வு நேற்று நடைபெற்றது. இதன் போது, மாநகர சபையால் புதிதாக வழங்கப்பட்ட இடத்தில் வியாபார நிலையம் ஒன்றை நடத்தும் நபர் சபைக்கு வந்து உறுப்பினர்கள் சிலருடன் உரையாடியுள்ளார்.


இதன்போது, பண்டாரிக்குளம் வட்டார உறுப்பினர் சி. பிறேமதாஸூடன் அவர் தர்க்கப்பட்டுள்ளார். தொடர்ந்து அவரை தாக்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.


இதையடுத்து, சக உறுப்பினர்கள் அவரை தடுத்து அங்கிருந்து வெளியேற்றினர்.

இதையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் மாநகர முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்ற சபை உறுப்பினர்கள முறைப்பாடு செய்தனர்.

இதனிடையே, தாக்குதலை நடத்தினார் என்று கூறப்படும் நபரும் மாநகர சபை உறுப்பினர் தன்னைத் தாக்கினார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)





வரலாற்று பிரசித்திபெற்ற நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் புகழ்பெற்ற கப்பல் திருவிழா நடைபெற்றவேளை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
10.10.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# புலம்பெயர்வின் ஆபத்து

இப்போதும் புலம்பெயர்வு, தமிழ் சமூகத்தில் மிகவும் கவர்ச்சிமிக்க தாகமாகவே இருக்கிறது. அந்தத் தாகம் யாருக்கு இல்லையென்று கண்டு பிடிக்க முற்பட்டால், அது முயலில் கொம்பைத் தேடுவதாகவே அமையும். இதுபற்றி தமிழ்ச்சூழலில் வெளிப்படையாக எவரும் பேசுவதில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களோ, சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்போரோ, கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள் என்னும் அடையாளங்களுடன் இருப்பவர்களோ எவரும் பேசுவதில்லை.

இதுபற்றி வெளிப்படையாகப் பேசுவதில் அனைவருக்குமே ஒரு சிக்கலுண்டு. ஏனெனில், இவர்களின் குடும்பங்களில் யாரோ ஒருவர் புலம்பெயர்ந்திருக்கிறார். குறிப்பாக, தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலரின் குடும்பங்கள் ஐரோப்பிய நாடுகளில்தான் இருக்கின்றனர். புலம்பெயராதீர்கள் என்று கூறும் தகுதிநிலை இவர்களில் எவருக்கும் இல்லை. இந்தப் பின்புலத்தில்தான் பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுவதில் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொள்ளும் இவர்கள் எவருமே புலம்பெயர்விலுள்ள சிக்கல்கள் தொடர்பில் மௌனம் காக்கின்றனர்.

ஆயுதப் போராட்ட காலத்தில் புலம்பெயர்வு போராட்டத்தை வலுப்படுத்தும் காரணியாக நோக்கப்பட்டது - ஒரு வகையில் ஊக்குவிக்கப்பட்டது. இன்று வெளிநாடுகளில் வாழும் மூத்த தலைமுறை என்பது இலங்கையின் அரசியல் நெருக்கடியை காரணமாகக் காண்பித்து வெளியேறியவர்கள்தான். இவர்களின் அடுத்த தலைமுறை ஐரோப்பிய நாடுகளில் தமிழ் ஐரோப்பியர்களாக ஆழவேரூன்றியிருக்கிறது. இவர்கள் இனித் தாயகம் திரும்புவது என்பதெல்லாம் நடக்காத ஒன்று. கோவில் திருவிழாக்களுக்கு தங்களின் பெற்றோரோடு வந்து செல்லுமளவுக்கே அவர்களுடைய தாயகத் தொடர்பு இருக்கப் போகிறது.

புலம்பெயர் சமூகம் என்பது எந்தளவு பலமாக இருக்கிறது என்பதற்குத் தெளிவான உதாரணங்கள் இல்லை. ஏனெனில், யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில்கூட "புலம்பெயர் லொபி" என்பது சர்வதேச அரங்குகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியதற்குச் சான்றில்லை. இப்போதும் ஆரம்பித்த இடத்திலேயே தமிழர் அரசியல் சுழன்று கொண்டிருக்கிறது. மாகாண சபையைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்னும் வாதம் முன்வைக்கபடுகிறது. ஆனால், மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான அழுத்தங்களைக்கூட தமிழர் தரப்புகளால் வழங்க முடியவில்லை.

மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கே அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாத நிலையில் ஒற்றையாட்சியை இல்லாதொழித்து சமஷ்டியை கொண்டுவருவது எவ்வாறு என்பதற்கு எவரிடம் பதிலுண்டு? இதற்குப் பதிலளிக்க முடியாதபோது பதிலளிக்கும் பொறுப்பை இல்லாமலாக்கும் ஓர் உத்திதான் நாங்கள் ஒற்றையாட்சியை எதிர்க்கிறோம். எனவே, மாகாண சபைகள் பற்றி கரிசனைப்பட வேண்டிய அவசியம் எங்களுக்கில்லை என்று ஒரு தரப்பு பொறுப்பிலிருந்து நழுவிக் கொள்கிறது.

இந்தப் பின்புலத்தில்தான் புலம்பெயர்வு எப்போதுமே கவர்ச்சிகரமானதாகவும் பிரச்னைகளுக்கான தீர்வாகவும் மக்களால் நோக்கப்படுகிறது. வடக்கு - கிழக்கில் தாங்கள் விரும்பியவாறு வாழ முடியாதென்று எண்ணினால் அடுத்த தெரிவு என்ன இருக்கிறது - புலம்பெயர்வுதான் அந்தத் தெரிவு. புலம்பெயர் மூத்த தலைமுறை தொடர்பான கவர்ச்சியின் ஈர்ப்பு வடக்கு, கிழக்கில் வாழ்பவர்கள் மத்தியில் ஒரு பேராசையாக மாறிவிட்டது. இனி, அதனை இலகுவாக மாற்ற முடியாது. ஏற்கனவே புலம்பெயர்ந்தவர்கள், புலம்பெயர்வுக்கான காரணியாக இருக்கின்றனர். இந்த நிலையில், தொடர்ந்தும் தமிழ் மத்தியதர வர்க்கம் வெளியேறிக் கொண்டிருப்பதானது ஈழத் தமிழ் சமூகத்தை மனிதவளமற்ற - ஆற்றலற்ற ஒரு மக்கள் கூட்டமாகவே இறுதியில் மாற்றமடையச் செய்யும். இந்த நிலைமையை முடிந்தவரையில் தடுக்கவில்லையாயின், ஒருவேளை குறிப்பிட்ட அதிகாரங்கள் தமிழர்களுக்கு கிடைத்தாலும்கூட அதனால் பலனிருக்காது.

## கல்லுண்டாயில் நிர்மாணிக்கப்பட்ட மணிமண்டபம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், ஒக். 10


யாழ்ப்பாணம் - கல்லுண்டாய் குடியேற்றக் கிராமத்தில் புலம்பெயர்ந்தவர்களின் நிதிப் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட இந்திரநிலா மணிமண்டபம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

கந்தையா செந்தூரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மண்டபத்தை திறந்து மக்கள் பாவனைக்கு கையளித்தார்.

நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி, சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமார் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக புலம்பெயர் உறவினரான ராஜரூபி பிறேமானந்தன் மற்றும் மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலை முன்னாள் அதிபர் அருட் சகோதரி மரிய டெய்சி செபமாலை ஆகியோர் கலந்து கொண்டதுடன், கல்லுண்டாய் குடியேற்றக் கிராம மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர், கல்லுண்டாய் கிராம மக்களின் பல தேவைகள் முழுமைப்படுத்திக் கொடுக்கப்படவேண்டியுள்ளதாக தெரிவித்தார். (அ)

## உள்ளூராட்சி வார பரிசில் வழங்கல்!



யாழ்ப்பாணம், ஒக். 10

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன் தினம் பிரதேச சபையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு தவிசாளர் ச.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானமும், சிறப்பு விருந்தினராக வட மாகாண சுற்றுலாப் பணியகப் பணிப்பாளர் திருமதி.பே.யசோதாவும் கலந்துகொண்டனர்.


உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்படன. அத்துடன் பெண்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன. கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வை அலங்கரித்தன. (அ-05)

## நீர்வேலியில் சுக்கிர வார சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 10

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவார கந்த புராண படனத் தொடர் 41 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இன்று 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்த குரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் நித்திய பாபுதரன் "அரசுசெய் படலம்" என்னும் தலைப்பில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒக்ரோபர் - 10 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 24
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சதுர்த்தி

**மேடம்** ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**இடபம்** விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.

**மிதுனம்** எதிர்பார்ப்புகள்நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்** உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகச்செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புதுஇடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்** குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்சினைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வுகாண்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி** சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**துலாம்** மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**விருட்சிகம்** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களை விட அதிகரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**தனுசு** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்** எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்** கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

# குப்பை கொட்டியவர்களை தடுத்த 8 பேர் அரியாலையில் நேற்று கைது

யாழ்ப்பாணம், ஒக்.10

யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் கழிவுகளை கொட்ட வந்தவர்களை மறித்து அடாவடியில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டி 08 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்தனர்.

அரியாலை பகுதியில் நல்லூர் பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையம் அமைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரியாலை மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், நேற்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான வாகனத்தில் குறித்த இடத்துக்கு கழிவுகளை கொண்டுவந்த போது அப்பகுதியில் மக்கள் கூடி வாகனத்தை மறித்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் அங்கிருந்தவர்களோடு பேச்சுக்களை நடத்தி, இந்த முறை வாகனத்தை அனுமதிக்குமாறு கோரியதை அடுத்து, வாகனத்தை செல்ல மக்கள் அனுமதித்தனர்.

இந்த நிலையில் , யாழில் உள்ள பிரபல தனியார் தங்குமிடத்தினர் அப்பகுதியில் உள்ள தமது காணி ஒன்றில் கழிவுகளை கொண்ட வந்த போது, அவர்களின் வாகனத்தை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடாவடியில் ஈடுபட்டு பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என குற்றஞ்சாட்டி 08 பேரை கைது செய்தனர்.

அரியாலை பகுதியை குப்பை மேடாக்கும் முயற்சியைத் தடுக்க போராடியவர்களை பொலிஸார் பொய் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-03)

# பிள்ளைகளுக்கு பாதுகாப்பு கோரி பெற்றோர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

## பொலிஸார் பொய் வழக்கு போடுவதாக குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 10

வாள்வெட்டு மற்றும் சமூக விரோத செயல்பாடுகளை மேற்கொள்வதுடன் தமது பிள்ளைகளை அதில் ஈடுபடுமாறு வற்புறுத்தி பல்வேறு இடையூறுகளை மேற்கொள்ளும் நபரிடமிருந்து தமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிசெய்து, பிரதேச வாழ் மக்களின் இயல்பு வாழ்வையும் உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். அரசடி வாழ் மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டை நேற்றுக்காலை மேற்கொண்டபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அரசடி வாழ் மக்கள் கூறுகையில்,

குறித்த நபர் நீண்டகாலமாக பல்வேறு சமூகவிரோத குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைக்கும் சென்ற ஒருவர். எமது அரசடி பகுதியில் வாள்வெட்டு சம்பவங்கள் இவரது பின்னணியில் தான் இடம்பெற்று வருகின்றன.

இது குறித்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் நாம் நாளாந்தம் பொரும் துன்பங்களுக்குள்ளாகி வருகின்றோம்.

இந்த நிலையில், அண்மையில் குறித்த நபரால் வெளியூரில் இருந்து சிலர் வரவழைக்கப்பட்டு

வாள்வெட்டு சம்பவம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது எமது பிள்ளைகள் தம்மை பாதுகாத்துக்கொள்ள தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினர்.

இதன்போது ஒருவர் காயங்களுக்குள்ளானார். இதைக் காரணமாக வைத்து எமது ஏழு பிள்ளைகளை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். ஆனால், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை பொலிஸார் கைது செய்யவில்லை.

இந்த நிலையில் தான் எமது பிள்ளைகள் மீது தேவையற்ற வகையில் சோடிக்கப்பட்ட வழக்குகள் பொலிஸாரால் பதியப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியே மனித உரிமைகள் காரியாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளோம் என்றும் மக்கள் தெரிவித்தனர். (எ-05)

# அனுமதியின்றி இயங்கிய விடுதிக்கு சிவப்பு அறிவித்தல்

மன்னார், ஒக். 10

மன்னார் சின்னக்கடையில் எந்த அனுமதியுமின்றி இயங்கி வந்த தனியார் விடுதிக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபைக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக மன்னார் நகர சபை தவிசாளர் டானியல் வசந்தன் தலைமையிலான குழுவினர் விடுதியை பார்வையிட்டனர்.

இதையடுத்து, உரிய ஆவணங்களை 14 நாட்களுக்குள் நகர சபைக்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதுடன், சிவப்பு அறிவித்தலும் விடுக்கப்பட்டது.

இதேவேளை, மன்னார் நகரில் அனுமதி பெறப்படாத விடுதிகளால் சமூக சீரழிவுகள் பல இடம்பெற்று வருகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்து இளைஞர் சங்கத்தின் வைரவிழா நாளை

யாழ்ப்பாணம், ஒக்.10

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 60ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வைர விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை மல்லாகம் பழம்பதி தேவஸ்தானத்திலிருந்து கலை கலாசார பண்பாட்டு அம்சங்களுடன் கூடிய நடைபவனியுடன் பிற்பகல் 03.00 மணியளவில் ஆரம்பமாகி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் பிரதான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் பொ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு ஆசியுரையை மாவை ஆதீன முதல்வர் மகாராஜாசிறீ து. ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு பிரம்மசிறீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார் மற்றும் மருதனார்மடம் சிறீ அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய ஆதீனகர்த்தா சிவசிறீ இ. சுந்தரரேஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தா சபை செயலாளர், வைத்திய கலாநிதி தி. திவாகரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

60ஆவது ஆண்டு நிறைவாக "வைரச்சங்கமம்" எனும் நூல் வெளியீடு செய்யப்படவுள்ளதுடன் வீணைக்கச்சேரி, கோவலன் கண்ணகி நாடகம் மற்றும் தெய்வீக இசைச்சங்கமம் ஆகியன நடைபெறவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவரிடையே மன உளைச்சல் அதிகரிப்பு!

## களனி பல்கலை மருத்துவ பீட பேராசிரியர்

கொழும்பு, ஒக். 10

**பாடசாலை மாணவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். வகுப்பறையில் உள்ள 6 மாணவர்களில் ஒருவர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். அந்த வகையில் இலங்கையில் நாளாந்தம் இளைஞர்களிடையே மன ரீதியான தாக்கம் அதிகரித்து செல்வதாக களனி பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் விசேட வைத்திய நிபுணர் மியுரு சந்திரதாச சுட்டிக்காட்டியுள்ளார்.**



உலக மனநல ஆரோக்கிய தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கை மன்றத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகளாவிய தரவுகளுக்கமைய 8 பேரில் ஒருவர் மனநல சிக்கலுடன் வாழ்ந்துவருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது அவர்களின் உடல் ஆரோக்கியத்தையும், மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் விதத்தையும், அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கக்கூடும். களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடமும் , மனநல பிரிவும் இணைந்து முன்னெடுத்திருந்த ஆய்வில் பாடசாலை மாணவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளமை தெரிய வந்துள்ளது.

10 மற்றும் 13 ஆம் தரங்களில் கல்வி பயிலும் 1,045 பாடசாலை மாணவர்களை மையமாகக் கொண்டு மேற்படி விசேட ஆய்வினை முன்னெடுத்திருந்தோம்.

இதன்போது அவர்களில் 24 வீதமானோர் விபத்துகள் உள்ளிட்ட அபாயகரமான நிலைமைகளால் ஏற்பட்டிருந்த மன நல சிக்கலால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். உலக நாடுகளில் இளைய சமுதாயத்தினரிடையே அபாயகரமான நிலைமைகளால் ஏற்படக்கூடிய மனநல பாதிப்பு 10 தொடக்கம் 13 வீதமாக காணப்படுகின்ற போதிலும் இலங்கையில் 24 வீதமானோர் பாதிப்புக்குள்ளாகியுள்ளமை அவதானம் மிக்க விடயமாக உள்ளது.

மேலும் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சுமார் 60 வீதமானோர் அபாயகரமான நிலைமைகள் அன்றி வேறு காரணிகளால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். வகுப்பறையில் உள்ள 6 மாணவர்களில் ஒருவர் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்.

அந்த வகையில் இலங்கையில் நாளாந்தம் இளைஞர்களிடையே மன ரீதியான தாக்கம் அதிகரித்து செல்வதைக் காண முடிகின்றது. பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையிலான தொடர்பாடல் இன்மை, வன்முறைகளுக்கு ஆளாகும் சிறார்களின் மனநிலையை சீரமைக்காமை போன்ற காரணங்கள் இத்தகையதொரு நிலை உருவாகியுள்ளது. இக்காலத்தில் உள்ள சிறுவர்களிடம் எதிர்வினைகளை தாங்கக் கூடிய பக்குவம் மற்றும் அதனோடு இணைந்து செயற்படக்கூடிய ஆற்றலும் குறைவாக உள்ளமையால் மன உளைச்சலால் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த 25 வருட காலப்பகுதியில் மன நலம் தொடர்பாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த 33 ஆய்வுகளைக் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், வயது வந்தவர்களில் 30 வீதமானோர் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதுடன், 39 வீதமானோர் கடுமையான மன நோக்கு ஆளாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது-என்றார். (அ)

# நீச்சல் பயிற்சியின்போது 5 வயது சிறுவன் மரணம்!

கொழும்பு, ஒக். 10

மீரிஹான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நுகேகொடை பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சில் குளத்தில் மூழ்கி சிறுவன் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

நுகேகொடை, தலபத்பிட்டியவில் வசித்து வந்த 5 வயதுடைய சிறுவன் ஒவருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பிற மாணவர்களுடன் பயிற்றுவிப்பாளர் ஒருவரால் நடத்தப்பட்ட நீச்சல் பயிற்சி நடவடிக்கையின்போது இந்த விபரீதம் நடந்துள்ளதாக தெரியவருகிறது.

உயிரிழந்த சிறுவனின் உடல் மேலதிக பரிசோதனைக்காக களுபோவில போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து மீரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொன்சேகாவுக்கு சந்தர்ப்பம் வழங்கிய மகிந்த தூக்கில் இடப்படவேண்டியவரே!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஒக். 10

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறுவது போன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தூக்கிலிடவேண்டும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.



முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா மகிந்தவை தூக்கிலிட வேண்டும் என அண்மையில் கருத்து வெளியிட்டு இருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகா போன்ற ஓர் மோசமான நபரை ஒய்வு பெற்றுக் கொள்வதற்கு 10 நாட்களுக்கு முன்னர் இராணுவத் தளபதியாக நியமித்தமைக்காகவே மகிந்தவை தூக்கிலிடவேண்டும்.

இவ்வாறான மோசமான ஓர் நபருடன் இணைந்து யுத்தத்தை வழி நடத்தியமை தொடர்பில் மகிந்தவுக்கு தண்டனை விதிக்கப்படவேண்டியது அவசியம்.

பொன்சேகா போன்ற தீயவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக மகிந்த தண்டிக்கப்படவேண்டியவரே-என்றார். (அ)

# சிறைகளில் 34765 கைதிகள்!

கொழும்பு, ஒக். 10

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இன்றளவில் நீதிமன்றத் தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 10,509 கைதிகளும், சந்தேகத்தின் அடிப்படையில் 24,256 கைதிகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக 34,765 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது தேசிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மப்பிரிய திஸாநாயக்க முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் இன்றளவில் (2025.09.23 ஆம் திகதி வரையான காலப்பகுதி) நீதிமன்றத்தால் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 10,509 கைதிகளும், சந்தேகத்தின் அடிப்படையில் 24,256 கைதிகளும் என்ற அடிப்படையில் மொத்தமாக 34,765 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மரண தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை கைதிகளை தவிர்த்து குறுகிய காலம் என்ற அடிப்படையில் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட கைதிகளுக்கு சிறைச்சாலை சட்டத்தின் 302 பிரிவின் பிரகாரம் தண்டனைக் காலம் குறைக்கப்படுகிறது. அதுவும் நீதிமன்றத்தின் வழிகாட்டலுக்கு அமைவாகவே இடம்பெறுகிறது.

சிறைக்கைதிகளைத் தவிர அபராதம் செலுத்த முடியாமல் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் 2,122 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் விடயத்தில் நியாயமான மற்றும் முறையான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன-என்றார். (அ)

# விந்தணு வங்கி மூலம் 10 பெண்கள் கர்ப்பம்!

கொழும்பு, ஒக். 10

கொழும்பில் உள்ள காசல் வீதி மகளிர் மருத்துவமனையில் புதிதாக நிறுவப்பட்ட விந்தணு வங்கி மூலம் 10 பெண்கள் வெற்றிகரமாக கருத்தரித்துள்ளதாக மருத்துவமனை பணிப்பாளர் அஜித் குமார தன்தநாராயன தெரிவித்தார்.

குறித்த விந்தணு வங்கி நிறுவப்பட்டு சுமார் ஆறு மாதங்கள் ஆகின்றன.

இந்த வங்கியில் தானம் செய்பவர்களின் பல நோய்களுக்கான முறையான மருத்துவ பரிசோதனைகளை நடத்திய பிறகு, அவர்களின் விந்தணு வங்கியில் சேமிப்பில் வைக்கப்படுவதாக மருத்துவமனை பணிப்பாளர் தெரிவித்தார்.

பின்னர் தந்தையர்கள் மீண்டும் தொடர்புடைய சோதனைகளுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும், அந்த சோதனைகள் மூலம் அவர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்திய பிறகு, விந்தணு சேமிப்புக்கு தயார் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்த காலகட்டத்தில் விந்தணுவை சேமிக்க திரவ நைட்ரஜன் பயன்படுத்தப்படுவதால், அதிக செலவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு பரிசோதனைக்காக மீண்டும்வரும் விந்தணுக்களை தானம் செய்யும் தந்தையர்களிடம் ஒரு குறிப்பிட்ட பலவீனம் இருப்பதாகவும், அதை உடனடியாகத் தடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

# பணிப்புறக்கணிப்பில் இறங்கும் கிராம உத்தியோகத்தர் சங்கம்!

கொழும்பு, ஒக். 10

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் நாட்களில் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

குறைக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவை மீள வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட உள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்தபோதே அந்த சங்கத்தின் தலைவர் நந்தன ரணசிங்க இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

அத்துடன் எதிர்வரும் பாதீட்டுத் திட்டத்தில் தங்களுக்கான அனைத்துப் பிரச்னைகளுக்குமான தீர்வினை முன்வைக்குமாறும் அவர் கோரியுள்ளார். (அ)

# ஐரோப்பிய ஒன்றியக் குழுவுடன் எதிர்க்கட்சித் தலைவர் சந்திப்பு

கொழும்பு, ஒக். 10

அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தலைமையிலான விசேட பிரதிநிதிகள் குழுவுடனான சந்திப்பில் தெளிவுபடுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ ஆகியோருக்கிடையில் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.


போட்டி விதிமுறைகளுக்கு இணங்குதல், தற்போதைய அரசாங்கம் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை இடைநிறுத்த எடுத்து வரும் நடவடிக்கைகள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்கள் எதிர்கொள்ளும் பல சவால்கள் தொடர்பில் இந்த சந்திப்பின்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் கார்மென் மொரேனோ மற்றும் கலாநிதி ஹெஸ்ஸோடன் இணைந்து, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மை துறையைச் சேர்ந்த வணிக முயற்சித் தலைவர்களுடனான சந்திப்பிலும் கலந்துகொண்டார்.

இதன் ஊடாக, உள்நாட்டு தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் சவால்களை ஐரோப்பிய ஒன்றிய தூதுரிடம் நேரடியாக முன்வைக்க இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷபான தேயிலை தொழிற்சாலையில் நேற்று அதிகாலை பயங்கர தீ விபத்து!



நுவரெலியா, ஒக். 10

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஸ்கெலியா லக்ஷபான தேயிலை தொழிற்சாலையில் தீ பரவல் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ பரவல் சம்பவமானது நேற்று அதிகாலை 01. 30 மணியளவில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தொழிற்சாலை திடீரென தீ பற்றி எறிந்தமையால், தொழிற்சாலையில் இருந்த அனைத்து பொருட்களும் எரிந்து நாசமாகின.

இதேவேளை லக்ஷபான பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தேயிலை தொழிற்சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த தேயிலை கொழுந்து மற்றும் பொதிசெய்யப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட தேயிலை தூள்களும் தீயில் கருகின.

லக்ஷபான தோட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நேற்றைய தினம் 5 பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தொழிலுக்கு செல்லவில்லை. குறித்த தோட்ட மக்களால் பறிக்கப்பட்ட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேயிலை கொழுந்து அழிந்துள்ளதாக மக்கள் கூறினர். தீயினை கட்டுப்படுத்துவதற்கு ஹற்றன்- டிக்கோயா நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இது திட்டமிட்ட செயல் என பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இந்த தேயிலை தொழிற்சாலை தீ பற்றி எரிந்தமையால் தாம் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாக தோட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். எனவே, தேயிலை தொழிற்சாலையை உடனடியாக புனரமைப்பு செய்யுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிற்சாலை தீ பற்றியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என நல்லதண்ணி பொலிஸார் கூறினர். அத்தோடு, ஹற்றன் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# தனியார் கல்வி நிலையங்களில் பொதுவான முறைமைகள் வரும்

இறக்காமம், ஒக். 10

அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் பொதுவான முறைமைகள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக நாடு பூராகவும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் அதிகமாக பதிவாகி வருகின்றன. அதிலும் குறிப்பாக தனியார் கல்வி நிறுவனங்களை மையப்படுத்தி சிறுவர்களுக்கு எதிரான பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல்கள், கல்வி நிலையங்களின் அடிப்படை வசதிகள் அற்ற நிலை மற்றும் போதைப் பொருட்கள் விநியோகம் என பல பாரதூரமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவற்றைத் தடுக்க அம்பாறை மாவட்டம், இறக்காமம் பிரதேச சபையால் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் ஓய்வு மற்றும் ஆன்மீக செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், போயா தினம், ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 08. 00 மணிமுதல் நண்பகல் 12. 00 மணி வரை, தவணை பரீட்சை நடைபெறும் நாட்கள் மற்றும் ரமலான் மாதத்தின் இறுதி பத்து நாட்களில் தனியார் வகுப்புகள் நடத்துவதை தடை செய்தல், வார இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி அஹதிய்யா பாடசாலை நடைபெறுவதால் காலை 08.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை எந்த பிரத்தியேக வகுப்புகளும் நடத்துவதற்கு அனுமதி இல்லை.

தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ள சூழலில் சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாதுகாப்பற்ற இடங்கள், பாழடைந்த வீடுகள், வளவுகள், போதைப் பொருள் வியாபாரம், இருள் சூழ்ந்த சந்திகள், டெங்கு நுளம்பு பெருகக் கூடிய இடங்கள் என்பனவற்றை இனங்கண்டு அவற்றை அகற்ற நடவடிக்கை எடுத்தல், மேற்படி தீர்மானங்களை உடன் அமுலுக்கு கொண்டு வருவதுடன் இவை தொடர்பாக தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுக்கு தெளிவூட்டும் அமர்வு தவிசாளர் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-06)




# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி

சாய்ந்தமருது

மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் விசேட விழிப்புணர்வு நடைபவனி நடைபெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையிலும் வழிகாட்டலிலும் நடைபெற்ற இந்த நடைபவனியில், மார்பக புற்றுநோயைத் தடுக்கும் வழிமுறைகள், ஆரம்ப கட்ட அறிகுறிகளை அறிதல் மற்றும் முறையான பரிசோதனைகளின் முக்கியத்துவம் குறித்து விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. (எ-06)

# இயற்கை அனர்த்தங்களால் வசிப்பிடங்களை இழந்த பெருந்தோட்ட மக்களுக்கு புதிய வீடு

கொழும்பு, ஒக். 10

இயற்கை அனர்த்தங்களால் வசிப்பிடங்களை இழந்த பெருந்தோட்ட மக்களுக்கு புதிய வீடுகளை வழங்குவதற்காக பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இயற்கை அனர்த்த நிலைமைகளால் தற்காலிக வீடுகளில் நீண்டகாலமாக வசித்து வருகின்ற 3,250 தோட்டக் குடும்பங்கள், பல படிமுறைகளுடன் கூடிய திட்டத்தின் கீழ் பாதுகாப்பான இடத்தில் மீண்டும் குடியேற்றும் நோக்கில் "இயற்கை அனர்த்தங்களால் வசிப்பிடங்களை இழந்த பெருந்தோட்ட சமூகத்துக்கு புதிய வீடுகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம்" 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தை 2025-2027 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், குறித்த காலப்பகுதியில் 1,400 புதிய வீட்டு அலகுகளை அமைத்து, பயனாளிக் குடும்பங்களை குடியேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்துக்கான மொத்த செலவு 4,500 மில்லியன் ரூபாய்களாவதுடன், 2025 ஆம் ஆண்டில் 1,300 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது குறித்த வேலைத் திட்டத்தின் கீழ் பதுளை, கேகாலை, நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, கொழும்பு, களுத்துறை, மாத்தறை மற்றும் மொனராகலை போன்ற மாவட்டங்களில்தகைமை பெற்றுள்ள 495 பயனாளிக் குடும்பங்களுக்கு வீடு கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத எஞ்சிய குடும்பங்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சால் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய, இயற்கை அனர்த்தங்களால் வசிப்பிடங்களை இழந்த பெருந்தோட்ட சமூகத்துக்கு புதிய வீடுகளை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை 2027.12.31 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தல் மற்றும் இடைக்கால வரவு- செலவு திட்டத்தில் அதற்குத் தேவையான நிதியொதுக்கீடு செய்வதற்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# ஐஸ் போதையுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணை

கல்முனை, ஒக். 10

அம்பாறை மாவட்டம் - கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் 37 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்கு பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தரவைப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள கடற்கரை பள்ளி வீதியில் வைத்து கல்முனை விசேட அதிரடிப் படையினர் இவரை கைது செய்தனர்.

ஒரு மில்லி 50 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் குறித்த சந்தேக நபரிடமிருந்து மீட்கப்பட்டதுடன் கைதானவர் நீண்டகாலமாக போதைப்பொருளை பழ விற்பனையாளர் போர்வையில் விற்பனை செய்தவர் என்றும் தெரியவந்துள்ளது. (எ-01)

# கணவன் உட்பட பொலிஸாரை ஏமாற்றி நாடகமாடிய பெண்ணுக்கு விளக்கமறியல்

சம்மாந்துறை, ஒக். 10

நகைகள் திருடப்பட்டுள்ளதாக கூறி கணவரிடம் தப்பிப்பதற்கு பொலிஸாரை ஏமாற்றி நாடகமாடிய பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி அன்று அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்- மஸ்லம் வீதி பகுதியில் உள்ள வீடொன்றில் சுமார் 45 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாகவும் தனது கணவர் வெளிநாடு ஒன்றிலிருந்து இலங்கைக்கு திடீரென திரும்பவுள்ள நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் 32 வயதுடைய குடும்பப்பெண் ஒருவர் முறைப்பாடு மேற்கொண்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டுக்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிஷாந்த வெதகே வழிகாட்டலில் பெருங் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எம். அஸீம் தலைமையில் பொலிஸ் குழுக்கள் புலன் விசாரணைகளை துரித கதியில் மேற்கொண்டிருந்தன.

இதற்கமைய அம்பாறையில் இருந்து தடயவியல் பொலிஸ் பிரிவு, பொலிஸ் மோப்பநாய் பிரிவு என்பன சோதனையில் பங்கேற்றன. இதன்போது, குறித்த வீட்டில் திருடப்பட்டதற்கான சான்றுகளோ அல்லது மேற் கூறப்பட்ட 45 இலட்சம் ரூபாய் நகைகள் திருடப்பட்டமைக்கான எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. இருப்பினும் விசாரணையின் தொடர்ச்சியாக முறைப்பாட்டை செய்த குடும்பப் பெண்ணில் சந்தேகமடைந்த பொலிஸார் அப்பெண்ணை கடந்த 3 ஆம் திகதி துருவி துருவி விசாரணை மேற்கொண்டனர். இதன்போது பல்வேறு உண்மைகள் வெளிவரத் தொடங்கின.

இதனடிப்படையில் கணவன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்ற நிலையில் தனியாக இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்த குறித்த பெண் தனது கையிருப்பில் இருந்த பணம் மற்றும் நகைகளை பல்வேறு தேவைகளுக்காக செலவு செய்துள்ளார். இந்த நிலையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்ற கணவன் திடீரென நாடு திரும்பும் நிலையில் இருப்பதாக அப்பெண்ணிடம் குறிப்பிட்டுள்ளார். இதனால் கலவரமடைந்த அப்பெண் 45 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாக நாடகமாடி கல்முனை பகுதியில் உள்ள பிரபல நகையகத்துக்கு சென்று நகைகளை விற்பனை செய்ததை பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்ட அப்பெண் கைது செய்யப்பட்டு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இதன்போது குறித்த பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார்...

நடத்தி வருகிறது.

இந்த நிலையில், மன்னாரில் கனிய மணல் அகழ்வை முழுமையாக நிறுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான அமைச்சரவை பத்திரத்தை விரைவில் சமர்ப்பித்து, அமைச்சரவையின் அனுமதியை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் மற்றும் தொடர்புடையவர்களுடன் இன்றைய தினம் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், குறித்த கலந்துரையாடல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## முந்தைய...

தெரிவித்தார்.

மேலும், வாக்கெடுப்பில் தோல்வியடைவது உறுதி என்று தெரிந்திருந்தும் முன்னைய அரசாங்க உறுப்பினர்கள் பொதுமக்களின் வரிப்பணத்தை வீணடித்தன. வாக்கெடுப்பை கோருவது ஏற்கனவே சர்வதேசமயமாக்கப்பட்ட இந்தப் பிரச்னையை உள்நாட்டு தளத்துக்குக் கொண்டு வந்து தீர்ப்பதற்கான வாய்ப்பை அடைத்து விடும் என்றும் அவர் கூறினார்.

தவிர, மனித உரிமைகளுக்கு முக்கியமான சட்ட அமலாக்க நிறுவனங்கள் மற்றும் நமது நீதித்துறை அமைப்பை நாங்கள் பலப்படுத்தி, சுதந்திரமாக்கி வருகிறோம், காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக் கான அலுவலகம் ஆகியவற்றை பலப் படுத்தி சுதந்திரமாக்கி வருகிறோம்.

போர் முடிந்து 16 ஆண்டுகளுக்குப் பிறகும் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்து, சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைகளுக்கு இணங்க மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பயங்கரவாதத்தை ஒடுக்கும் சட்டத்தை விரைவில் கொண்டு வர உள்ளோம். நிகழ்நிலை காப்புச் சட்டத்திற்கு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் திருத்தங்களைக் கொண்டு வர எதிர்பார்க்கிறோம்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை அமைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி போரின் முடிவில் வலியுறுத்தியது. அந்தக் காலத்திலேயே இந்த தேசிய ஆணைக்குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், இன்று ஜெனிவா தீர்மானமோ அல்லது இந்த விவாதமோ இருந்திருக்காது.

எனவே, விரைவில் உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான சட் டத்தை இந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி, அந்தக் ஆணைக்குழுவின் பணிகளைத் தொடங்க நாங்கள் எதிர் பார்க்கிறோம். சுதந்திரமான பொது வழக்கறிஞர் அலுவலகத்தை அமைக் கவும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. இந்த முற்போக்கான நடவடிக்கை களை நாங்கள் ஜெனிவாவுக்குக் காட்டுவதற்காக எடுக்கவில்லை. பல ஆண்டுகளாக அரசு அடக்குமுறைக்கும் மனித உரிமைகள் மீறலுக்கும் ஆளான ஓர் அரசியல் இயக்கமாக, மனித உரிமைகள் மீதுள்ள உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் அனைத்து சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களுக்கான உண்மையான அனுதாபம் காரணமாகவே இந்த நடவடிக்கை களை எடுக்கிறோம். இந்த நடவடிக் கைகளை நாங்கள் போரை முடித்த இராணுவ அதிகாரிகளை அல்லது வேறு எந்த சமூகத்தையும் இலக்கு வைக்க எடுக்கவில்லை என்பதையும் தெளிவாகக் கூற விரும்புகிறேன் என்றும் அவர் தனது நீண்ட உரையில் தெரிவித்திருந்தார். (ஐ)

## பணியாளர்....

நீடிக்கப்பட்ட கடன் வசதி வழங்க கடந்த 2023 மார்ச் 20ஆம் திகதி இணக்கம் எட்டப்பட்டது. இதன்படி, கட்டம் கட்டமாக 300 கோடி டொலர் இலங்கைக்கு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அணையா...

- அரியாலை மனிதப் புதைகுழிக ளுக்கு சர்வதேச நீதி கோரி அணையா விளக்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அணையா விளக்கு ஏற்றப்பட்ட இடத்தில் போராட்டத்தின் நிறைவில் இந்தத் தூபி நிறுவப்பட்டிருந்தது. இந்த நிலையில் இனந்தெரியாதவர்களால் இந்தத் தூபி அடித்து உடைக்கப்பட்டது. இரவுவேளை இந்தத் தூபி உடைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. எனினும், நேற்றைய தினமே அதே இடத்திலேயே தூபியை மீண்டும் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. (ஐ)

## பெலவத்தையின்...

தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், பெலவத்தையிலிருந்து தனிநபர் ஒருவரால் அரசாங்கம் நிர்வகிக்கப்படுவ தாக எதிர்க்கட்சிகள் வெளிப்படுத்த முற்படுகின்றன. ஆனால், அது உண்மை யல்ல. யாராலும் அதனைச் செய்ய முடியாது. இப்போது ஓர் அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தீர்மானங்கள் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையால் எடுக்கப்படுகின்றன. அந்தத் தீர்மானங்கள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளால் செயல்படுத்தப்படுகின்றன.

அரசாங்கம் என்பது தேசிய மக்கள் சக்தியாகும். அந்த அரசாங்கத்துக்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவும், அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு பங்களிக்கவும் உத்திகளைத் தயாரிக்கவும் நடவடிக்கைகளை எடுக்கவும் எமக்கு இடமும் தேவையும் இருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் வழிநடத்தல் குழு பெலவத்தையிலேயே தொடர்ந்தும் கூடுகிறது. மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழுவும் பெலவத்தையிலேயே கூடுகிறது.

இவ்வாறு இரு கூட்டங்களின் போதும் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் அங்கு ஒன்று கூடுகின்றனர். அரசாங்கத்தில் எந்த பதவிகளையும் வகிக்காத பலர் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தில் இருக்கின்றனர். நானும் அங்கிருக்கிறேன். நாம் குறைபாடுகளைப் பற்றியும் கலந்துரையாடுகிறோம். எதிர்காலத்தில் செய்ய வேண்டிய விடயங்கள் பற்றியும் பேசுகிறோம். பல யோசனைகள் முன்வைக்கப்படுவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான இணக்கப்பாடுகளும் எட்டப்படுகின்றன.

அரசாங்கத்தை செயல்படுத்துவதில் பெலவத்தையும் தொடர்புபட்டுள்ளது. பெலவத்தை என்ற கட்டடம் தொடர்புபடவில்லை. இரு கட்சிகளும் அங்கு கூடுவதால் அந்த இடம் அரசாங்கத்துடன் தொடர்புபட்டுள்ளது. எனினும், பெலவத்தையில் தனிநபர் ஒருவர் கைகளில் கைபேசியை வைத்துக் கொண்டு அரசாங்கத்தை வழிநடத்துவதாகக் கூறுவது மிகைப்படுத்தலாகும்.

அரசாங்கம் அங்கிருந்து நிர்வகிப்படுவதாக குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களே அரசியல் பழிவாங்கலும் இடம்பெறுவதாகக் கூறுகின்றனர். அவர்கள் கூறுவதைப் போன்று பெலவத்தையில் எந்த வகையிலும் அரசியல் பழிவாங்கல் திட்டமிடப்படவில்லை - என்றார். (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தகவல்களை வெளியிடமுடியாது

### நீதி அமைச்சர் ஹர்சன

கொழும்பு, ஒக். 10

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய விசாரணை தொடர்பில் எந்தவித தகவல்களும் வெளியிடப்படக்கூடாது என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதால், அது தொடர்பான தகவல்களை வெளியிடுவது, விசாரணைக்கு பாதகமாக அமையும்.

இதன்படி, குறித்த விசாரணை தொடர்பாக தகவல்களை வெளியிடுவது தொடர்பில் பாராளுமன்றமும் உத்தரவுகளை வழங்கக்கூடாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி தொடர்பான தகவல்களை பகிரங்கப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோரியபோதே, நீதி அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

தகவல்களை பகிரங்கப்படுத்துவதால், விசாரணைகள் சீர்குலையக்கூடும் எனவும் நீதி அமைச்சர் கூறினார். (ஐ)

# 3ஆவது மின்சார கட்டண திருத்தம்: மக்களிடமிருந்து 500 யோசனைகள்

கொழும்பு, ஒக். 10

இந்த வருடத்திற்கான மூன்றாவது மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக, பொதுமக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட அமர்வுகளில், சுமார் 500 பேர் யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய பொதுக் கருத்து ஒன்றுகூடல் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமானது.

அதன் இறுதி அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு நடைபெற்றது.

குறித்த அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட அனைத்து யோசனைகள் மற்றும் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு, மின்சார கட்டண திருத்தம் குறித்த ஆணைக்குழுவின் இறுதி தீர்மானம் இந்த மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபை, அண்மையில் மின்சார கட்டண திருத்தத்திற்கான தமது முன்மொழிவை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது.

இதில் மின்சார கட்டணங்களை 6.8 வீதம் அதிகரிக்க வேண்டுமென முன்மொழியப்பட்டிருந்தது. (அ)

# அமைச்சருக்கு எதிராக பதிவு சி. ஐ. டி. விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 10

அமைச்சர் வசந்த சமரசிங்க மீது போலி - அவதூறான கருத்துகளை பதிவிட்டதாகக் கூறப்படும் 10 பேஸ்புக் கணக்குகள் தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குறித்த 10 பேஸ்புக் கணக்கின் பயனர்களும் கண்டறியப்பட்ட நிலையிலேயே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரின் குடும்பம், அவரின் தொழில் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்ட புகைப்படங்களுடன் இந்தப் பதிவுகள் அமைந்துள்ளன என்று வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெளிநாடுகளின்...

தெரணவின் ஆண்டு நிறைவை யொட்டி கொழும்பு பேராயர் தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு ஆராதனையில் உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார். (ஐ)

## சகல மதத் தலைவர்களும்...

அது சைவ மதம்தான். இந்த நாட் டில் யுத்தம் ஏற்பட்ட காலம் முதல் பாதிக்கப்பட்ட மதம் சைவமதம். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்வீர்கள். பல கோவில்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அழிக்கப்பட்டுள்ளன. எவ்வளவோ மக்கள் இந்தப் போரில் மரணத்தை சந்தித்தார்கள். குழந்தைகள் முதல் மூத்தோர் வரை இறந்தார்கள். இன்றைக்கு மதத்தலைவர்கள்தான் இந்த நாட்டுப் பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று குரல் கொடுக்கவேண்டிய தேவை இருக்கிறது. அதனாலேயே சர்வ மதத் தலைவர்கள் கூடியுள்ள இந்த சபையினரை வாழ்த்துவதோடு, நான் கேட்பது, இலங்கையில் இருக்கின்ற மதத்தலைவர்கள் உடனடியாக நீண்ட காலமாக நாட்டில் இருக்கின்ற பிரச்னையை தீர்க்க வேண்டும். இதற்காக, யார் அரசாங்கத்தில் இருக்கிறார்களோ அவர்களிடம் வலியுறுத்தவேண்டும்.

35 வருட யுத்தத்துக்கு பின்னராக அழிக்கப்பட்ட பௌத்த கோவில்கள் கட்டப்பட்டுவிட்டன. நீண்டகாலமாக பௌத்த விகாராதிபதி இங்கு பணியாற்றுகிறார். வரலாற்று சிறப்பு மிக்க கீரிமலை காங்கேசன்துறையில் இருந்த ஆதிசிவன் கோயில் அழிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக எத்தனையோ கோவில்கள், மடங்கள் என பல வரலாற்று பிரசித்தி பெற்ற இடங்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

யுத்தம் முடிந்து எத்தனை வருடங்களாகிவிட்டன. இன்று வரைக்கும் நாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம் - இன்னமும் அனுமதியில்லை. அரசியல் பிரமுகர்கள், மதத்தலைவர்கள் இங்கு வரும்போது எமது ஆலயங்களை, பிரசித்திபெற்ற இடங்களை விடுவிக்க கோரினோம். சரி என்பார்கள், விடுவிப்போம் என்பார்கள். ஆனால், அவை நடந்தபாடில்லை.

இன்றைக்கும் மத வலிமையோடு தான் இந்த நாடு இருக்கிறது. இந்த நாட்டின் பௌத்த பீடத்தில் உள்ளவர்கள் இனப்பிரச்னையை தீர்க்க நினைத்திருந்தால், எல்லா மதத்தவர்களையும் அழைத்து ஆட்சியில் உள்ளவர்களுடன் கதைத்து ஒரு நாளில் இனப்பிரச்னையை தீர்க்க வேண்டும் என்று கூறியிருந்தால் இந்த மண்ணில் உயிர்களை இழக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இனவாதத்தை முன்னிலைப்படுத்தி விமல், கம்மன்பில மீண்டெழ முயற்சி

## மகிந்த ஜயசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 10

**விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப் பற்ற முயற்சிக்கின்றார்கள் என பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடாமலே தோல்வியை அறிந்து விலகிக் கொண்டவர்கள் இன்று தேசப்பற்றாளர்கள் போல் பேசுகின்றார்கள்.

இந்த நாடு இனவாதத்தால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அதற்கு இவர்கள் பொறுப்புக் கூற வேண்டும். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இன்றும் கடந்த அரசுதான் ஆட்சியில் உள்ளது என்று நினைத்துக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

போலியான விடயங்களைச் சமூகமயப்படுத்த முயற்சிக்கும் போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அவர்கள் முன்னிலையாக வேண்டும்.

இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப்பற்ற இவர்கள் முயற்சிக்கின்றார்கள்.

நாட்டு மக்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். மக்கள் மத்தியில் தவறான விடயத்தை சமூகமயப்படுத்த இடமளிக்க முடியாது-என்றார். (அ)

# இலங்கை குறித்து தவறான கருத்து உருவாக வாய்ப்பு!

## தயான் ஜயதிலக கூறுகிறார்

கொழும்பு, ஒக். 10

வாக்கெடுப்பு இல்லாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் உலகம் இலங்கையைப் பற்றிய தவறான கருத்தை உருவாக்கக்கூடும் என்று கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக்கு தீங்கு விளைவிக்கும் ஒரு தீர்மானத்துக்கு எதிராக மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கை நிரந்தர பிரதிநிதி வெற்றிகரமாக ஒரு தர்க்கரீதியான வாதத்தை முன்வைத்தார். இருப்பினும், தீர்மானத்துக்கு எதிரான வலுவான காரணங்கள் இருந்த போதிலும் வாக்கெடுப்பு கோரப்படாததால் அது வாக்கெடுப்பு இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டது குறித்து அவர் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்தார்.

“நாங்கள் வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்திருந்தால், குறைந்தபட்சம் நமது நட்பு நாடுகளில் சில தங்கள் ஆதரவைக் கூறியிருக்கும். இப்போது, வாக்கெடுப்பு இல்லாமல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால் உலகம் இலங்கையைப் பற்றிய தவறான கருத்தை உருவாக்கக்கூடும். அது துரதிர்ஷ்டவசமானது. இந்த வெளியுறவுக் கொள்கை என்னவென்று எனக்குப் புரியவில்லை.” என்று அவர் குறிப்பிட்டார். (ஐ)

# இராமர் பாலத்தை கண்டு ரசிக்க விரைவில் சுற்றுலா படகு சேவை

## தலைமன்னாரிலிருந்து ஆரம்பம்

மன்னார், ஒக். 10

தலைமன்னார் கிராமத்திலிருந்து தீடை பகுதியில் இராமர் பாலம் வரை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கான படகு சேவையை ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதிகளவு சுற்றுலாப் பயணிகள் இராமர் பாலத்தை பார்க்க வரும் சந்தர்ப்பத்தில் படகு சேவை ஒன்றை முன்னெடுக்க மன்னார் பகுதியின் மக்கள் கோரிக்கை முன்வைத்ததுடன் அரச தரப்பிலும் குறித்த கோரிக்கை பிரதேச மற்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு படகு சேவை மேற்கொள்ள முடிவுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கான அனுமதி பெறப்பட்டு படகு சேவை முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்நிலையில் படகு சேவை கட்டண வசூலிப்பை வன ஜீவராசிகள் திணைக்களம் முன்னெடுக்க உள்ளது. குறித்த நடவடிக்கை தொடர்பாக மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் உட்பட உறுப்பினர்களுடன் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், அரச அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையிலான சந்திப்பு நேற்று முன் தினம் மாலை மன்னார் மாவட்ட செயலகத்தின் அரச அதிபரின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

படகுச் சேவைக்கான கட்டண வசூலிப்பை 50இற்கு 50 என்றதன் அடிப்படையில் வன ஜீவராசிகள் திணைக்களமும் மன்னார் பிரதேச சபையும் செயற்பட்டு, சுற்றுலா பயணிகள் சேவையை நடைமுறைப்படுத்தலாம் எனவும் இதர வருமானங்கள் தொடர்பில் மன்னார் பிரதேச சபை திட்டங்கள் வகுத்து செயல்படுத்தலாம் என்றும் அரச அதிபர் தனது உரையில் தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்ட தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் உறுப்பினர் மற்றும் சில உறுப்பினர்கள், மன்னார் பிரதேச சபை கடற்கரை பூங்காவை நீண்ட நாட்களாக பராமரித்து வரும் நிலையில் மன்னார் பிரதேச சபையின் வருமானம் மிகக் குறைவானது என்றும் இன்னும் பல்வேறு காரணங்களை வலியுறுத்தி படகு சேவைக்கான நிதி வசூலிப்பு தமக்கு தருமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் அவ்வாறு செயல்படமுடியாது. வன ஜீவராசிகள் திணைக்களம் பல்வேறு இடங்களில் இவ்வாறான சுற்றுலா நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. தமக்கு உட்பட்ட பகுதியில் குறித்த கடற்கரை பூங்கா காணப்படுவதால் திணைக்களத்தின் சட்ட நடவடிக்கைக்கு ஏற்ப செயல்பட வேண்டும் என வனஜீவராசிகள் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அதிகாரி பாத்தியா மடுகல்ல தெரிவித்தார்.

இதன்போது மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் குறித்த கருத்தை ஆதரித்தும், கலந்து கொண்ட உறுப்பினர்கள் சிலர் இவ்வாறான கருத்தை தாம் அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் பல்வேறு தரப்பினரிடம் ஆலோசனை கருத்தை முன்வைத்து பிறிதொரு நாளில் இக்கூட்டத்தை நடத்தி குறித்த தீர்மானத்தை முன்னெடுக்கலாம் என்பதன் அடிப்படையில் மன்னார் அரச அதிபர் கூட்டத்தை நிறைவு செய்தார். (அ)

# டெங்கு நோய் தாக்கம் வடக்கில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 10

வடக்கு மாகாணத்தில் டெங்கு நுளம்பு அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவிக்கின்றார்.

மாகாண ரீதியில் பூச்சியியல் நிபுணர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்தத் தகவல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதன்படி, மாகாணத்தில் பல இடங்களில் டெங்கு நுளம்புக்கான குடம்பிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் மழையுடனான வானிலையால் நுளம்புக் குடம்பிகள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அதன் அடிப்படையில் டெங்கு காய்ச்சல் பரவ ஆரம்பித்தால் அதன் தாக்கம் சடுதியாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக அவர் எச்சரித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களே அதிக அபாயமிகுந்த வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜெனீவாவில் வாக்கெடுப்பை தவிர்த்து சர்வதேசத்தை வெற்றி கொண்டோம்!

## இலங்கை இராஜதந்திரி கருத்து

கொழும்பு, ஒக். 10

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் முன்வைக்கப்பட்ட புதிய தீர்மானம் மீதான வாக்கெடுப்பை அரசாங்கம் தவிர்க்கவே விரும்பியது. இந்த நிலைப்பாட்டின் ஊடாக சர்வதேசத்தை முழு அளவில் வெற்றி கொள்ள முடிந்துள்ளதுடன், தீர்மானத்தை முன்வைத்த பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளும் புதிய நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் முன்னெடுப்புகளுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. உள்ளக விசாரணை பொறிமுறை கட்டமைப்புக்குள் சர்வதேசத்தின் தலையீட்டை அனுமதிக்காது நிலைப்பாட்டில் இருந்து புதிய தீர்மானத்தின் ஏனைய விடயங்களை செயல்வடிவமாக்குவது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத்தும் என்று ஜெனிவாவில் உள்ள இலங்கை இராஜதந்திர அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

பிரித்தானியாவால் கொண்டுவரப்பட்ட புதிய தீர்மானம் மீதான வாக்கெடுப்பை இலங்கை கோராமை குறித்து தெளிவுப்படுத்தும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

புதிய ஜெனீவா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றால் இலங்கைக்கு சார்பாக கிடைக்கும் வாக்குகள் குறித்து கணிப்பீட்டை வைத்திருந்தோம். இதடினப்படையில் இந்த தீர்மானத்தை தோல்வியடை செய்வது என்பது கடினமான விடயமாகவே இருந்திருக்கும்.

எனவே தான் வாக்கெடுப்பை கோருவதை தவிர்த்தோம். புதிய தீர்மானத்தின் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு விடயத்தை மாத்திரமே அரசாங்கம் ஏற்கவில்லை. அதாவது ஜெனீவா குற்றச்சாட்டுக்கள் குறித்து உள்ளக விசாரணைகளில் சர்வதேச தலையீட்டை எதிர்க்கிறோம். ஏனைய அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு நடைமுறைப்படுத்த அவதானம் செலுத்துகிறோம்.

எனவே புதிய ஜெனீவா தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை திட்டமிட்டே அரசாங்கம் தவிர்த்தது. இதனூடாக சர்வதேசத்தை வெற்றி கொள்ள முடிந்துள்ளதுடன், பிரித்தானியாவும் இலங்கையின் நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது. எந்தவொரு நாட்டையும் நாங்கள் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையை தவறாக சித்தரித்த ஐரோப்பிய நாடுகள் பல தற்போது ஆதரவு வட்டத்துக்குள் வந்துள்ளன. எனவே ஜெனீவா தீர்மானம் குறித்து முழுமையான தெளிவுப்படுத்தலை நாட்டு மக்களுக்கு அரசாங்கம் வழங்கும்-என்றார். (அ)

# மத்தள விமான நிலையத்தில் வனவிலங்குதுறைக்கு அலுவலகம்

கொழும்பு, ஒக். 10

அம்பாந்தோட்டையில் உள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில், வனவிலங்குத்துறையின் பிரத்தியேக அலுவலகம் அமைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

காட்டு யானைகள் மற்றும் ஏனைய விலங்குகள் விமான நிலைய வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்து அணுகல் சாலைகளைக் கடக்கும் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து வருகின்றன.

இதன் காரணமாக உள்கட்டமைப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு விமான நிலையச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், புதிதாக நிறுவப்படவுள்ள அலுவலகம், வனவிலங்கு நடமாட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல், தாக்குதல்களைத் தடுப்பது மற்றும் பயணிகள், விமான நிலைய ஊழியர்கள் மற்றும் விமான நிலைய உள்கட்டமைப்பின் பாதுகாப்பை உறுதி செய்வது என்ற விடயங்களில் கவனம் செலுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.10.2025 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org